www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மூன்றாம் பருவத் தேர்வு - 2022

**(தொகுத்தறி மதிப்பீடு)**

**அறிவியல்**

வகுப்பு : 5 நேரம் : 2:00 மணி

மதிப்பெண்கள் : 60

பெயர் : ................................................... பிரிவு .................. எண் ......................

**1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :** 10

1. ______________ ஒரு மிகச்சிறந்த உரம்.
   அ) மண்புழு உரம் ஆ) பழங்கள் இ) செயற்கை உரம் ஈ) யூரியா
2. நீலச்சங்கத்தின் முக்கிய நோக்கம் விலங்குகளை ______________
   அ) துன்புறுத்தல் ஆ) சிறைபிடித்தல் இ) காப்பாற்றுதல் ஈ) புறக்கணித்தல்
3. மோட்டார் வாகனங்களால் வெளியேற்றப்படும் வாயு ______________
   அ) கார்பன்-மோனாக்சைடு ஆ) ஆக்ஸிஜன் இ) ஹைட்ரஜன் ஈ) நைட்ரஜன்
4. நிலக்கரி மற்றும் பெட்ரோலை எரிப்பதால் வெளிவரும் வாயு ______________
   அ) கார்பன் டை ஆக்சைடு ஆ) சல்ஃபர் டை ஆக்சைடு இ) ஆக்சிஜன் ஈ) குளோரின்
5. இந்தியாவிலுள்ள தேசியப் பூங்காக்களின் எண்ணிக்கை ________ அ) 416 ஆ) 73 இ) 26 ஈ) 16
6. முண்டந்துறை சரணாலயம் ______________ மாவட்டத்தில் உள்ளது.
   அ) திருப்பூர் ஆ) திருவாரூர் இ) திருநெல்வேலி ஈ) திருவள்ளூர்
7. ______________ வேளாண்மையை விட இலாபகரமானது.
   அ) பால்பண்ணை ஆ) பண்ணைத்தொழில் இ) பறவை பண்ணை ஈ) வேளாண்மை
8. அதிக அளவில் பால் கொடுக்கும் கால்நடை ______________
   அ) பசுமாடு ஆ) யாக் எருமை இ) எருமை மாடு ஈ) ஆடு
9. வெண்மைப் புரட்சியின் தந்தை என்று அழைக்கப்படுபவர் ______________
   அ) டாக்டர் வர்கீஸ் குரியன் ஆ) கேப்டன் வி. சுந்தரம் இ) Dr. M.S. சுவாமிநாதன் ஈ) சந்திரசேகர்
10. குளோரோ புளுரோ கார்பன் ______________யில் உபயோகப்படுத்தப்படுகிறது.
    அ) குளிர்சாதனப்பெட்டி ஆ) ஏ.சி. இ) இரண்டிலும் ஈ) எதிலும் இல்லை

**2. கோடிட்ட இடங்களை நிரப்புக :** 10

1. காற்று மாசு படுத்திகள் குழந்தைகளுக்கு நிமோனியா மற்றும் ______________ போன்ற நோய்களை ஏற்படுத்துகின்றன.
2. ______________ வளிமண்டல அடுக்கானது நம்மை புறஊதாக் கதிர்களின் பாதிப்பிலிருந்து பாதுகாக்கிறது.
3. அதிக அளவு மரங்களை நடுவதன் மூலம் நாம் வளிமண்டலத்தில் உள்ள ______________ ன் அளவைக் குறைக்கலாம்.
4. கிர் தேசியப் பூங்கா ______________ க்கு பெயர் பெற்றது.
5. ஆனை மலை வனவிலங்கு சரணாலயம் ______________ என்றும் வழங்கப்படுகிறது.
6. மண்புழு உரமாக்கல் என்பது ______________ ஐ சத்து நிறைந்த உரமாக மாற்றுவதாகும்.
7. ______________ மாட்டின் பால் பசுமாட்டின் பாலை விட அதிக ஊட்டச்சத்து கொண்டது.
8. பெரியார் தேசியப் பூங்கா கேரளாவில் உள்ள ______________ யில் அமைந்துள்ளது.
9. பொதுவாக கால்நடைகளில் காணப்படும் நோய் ______________
10. ______________ தாவரங்களால் நைட்ரேட்டுகளாக உபயோகிக்கப்படுகிறது.

**3. பொருத்துக :** 5

| | | | |
|---|---|---|---|
| 1. வெப்பமண்டலம் | - அ) பருப்புவகை தாவரங்கள் | ( 1 - | ) |
| 2. செவ்வறி சிந்தி | - ஆ) விண்கலம் | ( 2 - | ) |
| 3. முதுமலை | - இ) சிங்கவால் குரங்கு | ( 3 - | ) |
| 4. பசுமை உரம் | - ஈ) யானை | ( 4 - | ) |
| 5. களக்காடு | - உ) ஆந்திரப் பிரதேசம் | ( 5 - | ) |

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

4. சரியா, தவறா என எழுதுக : 5

1. முர்ரா என்பது எருமைமாட்டின் ஒரு இனம். (            )
2. பருப்பு இலைத் தாவரங்கள் தாவர இலையில் நைட்ரஜனைச் சேமித்து வைக்கின்றன. (            )
3. மண்புழு உரத்தை கழிவுநீர் சுத்திகரிப்பிற்கு பயன்படுத்தலாம். (            )
4. பனிப்பாறைகள் உருகுவதால் கடல் நீர்மட்டம் குறைகிறது. (            )
5. இந்தியாவில் 26 வகையான கால்நடை இனங்கள் உள்ளன. (            )

5. சுருக்கமான விடையளி : 6x3 =18

1. மண்புழு உரம் என்றால் என்ன ?
2. தமிழ்நாட்டில் காணப்படும் மாட்டினங்கள் சிலவற்றை எழுதுக.
3. காற்று மாசுபாடு என்றால் என்ன ?
4. புவி வெப்பமயமாதல் என்றால் எனன ?
5. பஞ்சகவ்யம் என்பது யாது ?
6. நீலச் சிலுவை சங்கம் குறித்து சிறு குறிப்பு எழுது.

6. விரிவான விடையளி : 2x6=12

1. விலங்குகளின் பயன்கள் யாவை ?
2. காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் வழிகள் யாவை ?

Padasalai.Net